# பூமிகா நிறுவனத்தின் ஸ்டெப் ஒன் திட்டம்

பூமிகா நிறுவனத்தின் ''ஸ்டெப் ஒன்'' திட்டமானது, படித்து முடித்து வேலை கிடைக்காமல் உள்ள தகுந்த வேலை தேடும் உடல் ஊனமுற்றவர்களுக்கு இலவசமாக வழங்கப்படும் ஒரு மாத கால 'அலுவலக அனுபவ பயிற்சி' ஆகும். இந்த ஒரு மாத கால பயிற்சியில் அலுவலக வேலை அனுபவம் பெற்று இவர்கள் தங்களின் தனித்திறமையை வெளிப்படுத்த நல்லதொரு வாய்ப்பாக இது அமையும். மேலும் இதுவரை ஊனமுற்றவர்களை பணியில் அமர்த்தாத நிறுவன அதிகாரிகளின் மனதில் நல்லதொரு மாற்றத்தை ஏற்படுத்தும் விதமாக இந்தப் பயிற்சி அமையும்.

இந்த திட்டம் சோதனை அடிப்படையில் அக்டோபர் 2007 மற்றும் டிசம்பர் 2007க்கும் இடைப்பட்ட காலத்தில் ஐந்து கண் பார்வையற்ற நபர்களுடன் தொடங்கப்பட்டது. இவர்கள் தகுதி மற்றும் திறமையின் அடிப்படையில் மூன்று நிறுவனங்களில் பயிற்சிக்கு அனுப்பப்பட்டனர். இந்த மூன்று நிறுவனங்களும் இதுவரை கண் பார்வையற்ற எவரையும் பணியில் சேர்த்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்த பயிற்சியின்போது நிறுவனங்கள் பணமோ அல்லது வேலைக்கான உத்திரவாதமோ தர தேவையில்லை. இந்த ஒரு மாத கால பயிற்சியின் முடிவில் பயிற்சியாளரின் வேலை செய்யும் திறமை மற்றும் தகுதியைப் பொறுத்து நிறுவன அதிகாரி வேலை கொடுப்பது பற்றி முடிவெடுப்பார்.

பூமிகா நிறுவனம் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் அவர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆதரவும் ஊக்கமும் கொடுத்து உறுதுணையாக இருக்கும். மேலும் பிரதி வாரம் ஞாயிற்றுக்கிழமை பயிற்சியாளர்கள் அனைவரும் ஒரு குழுவாக வந்து தாங்கள் கற்றவற்றையும் மற்றும் பிற விஷயங்களையும் பகிர்ந்து கொள்ள பூமிகா நிறுவனம் ஏற்பாடு செய்யும். இந்த நாளில் செயல் வழி நுணுக்கம் வாயிலாக அனைவரும் தாங்கள் அறிந்ததை மற்றவர்களுடன் சுலபமாக பகிர்ந்து கொள்ள பூமிகா நிறுவனம் வழிவகை செய்யும்.

இந்த திட்டத்தின் மூலம் ஊனமுற்றவர்கள் தங்களின் முயற்சி மற்றும் செயல்திறன் போன்றவற்றை பயிற்சியின்போது காண்பிப்பது மட்டுமின்றி ஊனமுற்றவர்களைப் பற்றி சமூகத்தில் நிலவும் தவறான கண்ணோட்டத்தை மாற்றி வேலை கொடுப்பவர்களின் மனதில் நல்லதொரு அபிப்ராயத்தை ஏற்படுத்த இது உதவும்.

பூமிகா நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட திறனாய்வு அறிக்கை ஒரு மாத கால பயிற்சியின் முடிவில் வேலை செய்பவரின் செயல்திறன் பற்றி அறிய அந்தந்த நிறுவனங்களால் பூர்த்தி செய்யப்பட்டு பெறப்படும். பயிற்சி பெறப்படும் காலத்திற்கு வேலை கொடுக்கும் நிறுவனம் எந்த பண உதவியோ அல்லது ஊக்கத்தொகையோ தராது. மாறாக பூமிகா நிறுவனம் பயிற்சி பெறும் காலத்திற்கு அவர்களின் போக்குவரத்து மற்றும் உணவு செலவிற்காக ஒரு குறிப்பிட்ட தொகையை ஊக்கத்தொகையாக வழங்கும்.

பூமிகா நிறுவனத்தின் ஸ்டெப் ஒன் திட்டமானது முதலில் ஐந்து கண் பார்வையற்ற நபர்களுடன் சோதனை முறையில் தொடங்கப்பட்டது. இந்த ஐந்து நபர்களில் நான்கு பேர் ஒரு மாத கால பயிற்சியை நிறைவு செய்தனர். அவர்களில் மூன்று நபர்கள் திறமையின் அடிப்படையில் தாங்கள் பயிற்சி பெற்ற நிறுவனங்களிலேயே பணி அமர்த்தப்பட்டனர். அதைப்போன்றே மேலும் மூன்று நபர்கள் பிப்ரவரி 2008ல் பயிற்சி நிறைவு பெற்று அதே நிறுவனங்களில் பணிபுரிகின்றனர்.

சோதனை அடிப்படையில் தொடங்கப்பட்ட இந்த திட்டமானது பலரது ஆதரவையும் ஊக்கத்தையும் பெற்றுள்ளது. இதனைத் தொடர்ந்து மேலும் பல உடல் ஊனமுற்றவர்கள் பயன் பெறும் வகையில் இந்தத் திட்டத்தை தொடர பூமிகா நிறுவனம் முடிவு செய்துள்ளது.

தமிழ்நாடு உடல் ஊனமுற்றோர் நல்வாழ்வு சங்கத்தால் பரிந்துரைக்கப்பட்ட சங்க உறுப்பினர் சக்திவேல் 'பூமிகா அறக்கட்டளை' அளித்த ஒருமாத கால 'அனுபவ பயிற்சி' திட்டத்தின் மூலம் 'வெப் டிசைனராக' ரூ. 6,000 மாத வருமானத்தில் தேர்வு செய்யப்பட்டு சென்னையில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் கடந்த இரண்டு மாத காலமாகப் பணிபுரிந்து வருகிறார். மேலும் பலர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின் மூலம் பல தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்புகள் பெற சென்னையில் உள்ள ஊனமுற்றவர்கள் தங்களைப் பற்றிய விவரங்களை ''உதவிக்கரத்திற்கு'' அனுப்பவும்.

* * *



தமிழ்நாடு உடல் ஊனமுற்றோர் நல்வாழ்வு சங்கம்

உதவிக்கரம்

UDAVIKKARAM TAMIL MONTHLY

மாத இதழ் | வருட சந்தா ரூ. 60/- | தனி இதழ் ரூ. 5/-

TAMILNADU ASSOCIATION FOR THE WELFARE OF THE PHYSICALLY HANDICAPPED

உதவி 7 | ஏப்ரல் 2008 | கரம் 1

PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www.docudesk.com